# ????? ??????? ?????????????

**Author :** admin

**Date :** February 9, 2018

???? ??????? ?????????!

?????? ????? ????? ????? ????????? ??????? ?????????????, ????? ??????????? ??????? ?????????. ???????.??.?????????? ??????? ?????????, ?????? ????????, ??????.??????? ?????, ???? ????????? ??????? ???????????? ????? ??????????? ??????????????? ??????????????????????????????????????????????????????????????????????? ????? ?????????? ???????? ???????????.

## தமிழியக்கம்

தனித்தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு வேளையில் வாழ்கிறோம். தமிழ் தனித்தன்மையோடு தற்போது வாழ்கிறதா? பரிதிமாற் கலைஞர் தொடங்கிய செம்மொழி முயற்சி முத்தமிழறிஞர் கலைஞரால் இந்திய மைய அரசின் ஏற்பினைப் பெற்றுத் தமிழ் செம்மொழியாகியுள்ளது.

மறைமலையடிகள், தமிழ்த்தென்றல் திருவிக, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலிய சான்றோர்தம் இடையறா முயற்சியின் விளைவாகத் தனித்தமிழ் இயக்கம் அரும்பியது. மணிப்பிரவாளம் என்ற கலப்படம், வடமொழி வல்லாதிக்கத்தால் தமிழில் இடைச் செருகலாய்ப் பயிர்க்கு ஊடான களையாக மண்டியபோது, தனித்தமிழ் இயக்க முன்னோடிகள் தமிழகம் தழுவி எடுத்த நடவடிக்கைகளால் வடமொழிக் கலப்பு வீரியம் இழந்தது.

பாவேந்தர் பாரதிதாசன் **தமிழ் இயக்கம்** என்ற நூலையே நெய்து தமிழ் மானங் காத்தார். தொடர்ச்சியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற தனித்தமிழ் இதழ்கள் வாயிலாகத் தமிழியக்கப் பணியை முன்னெடுத்தார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியான திராவிட இயக்கங்களால் இராமையா அன்பழகன் ஆனார். நாராயணசாமி நெடுஞ்செழியன் ஆனார். தமிழர்களின் அரசியல் இலக்கு திசைமாறிப் போனதால் இன்று என்ன நிலை? வடமொழிக் கிருமித் தொற்று ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டாலும் வடமொழி விலகி, வேலிக்கு வெளியே நின்று பாய்ச்சல் காட்ட, இந்தி ஆதிக்கம் என்ற மாறுவேடத்தோடு நிற்கிறது.

வடமொழி இருள் இருந்த இடத்தை இன்று ஆங்கில ஆதிக்கம் கைப்பற்றிவிட்டது. இந்த விபத்தின் வழியே பேச்சில், எழுத்தில், தமிழ்ச் சிவப்பணுக்கள் குறையத் தொடங்கிவிட்டன. வழிபாட்டில் தமிழ் இல்லை. நீதிமன்றத்தில் தமிழ் இல்லை. நாடாளுமன்றத்தில் தமிழ் பேசத் தடை. தமிழ் இதழ்களில், ஊடகங்களில் வெள்ளைத் தொழுநோய், வீட்டில் பிள்ளைகட்கும் தமிழ்ப்பெயர் வைப்பது அறவே வற்றி வருகிறது. வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் தமிழ்ப்பெயரால் அமைவது அரிதாகி வருகிறது. சின்னத்திரை, பெரியதிரை, சமூக ஊடகங்களில் பாலைக்கானல் நீரைப்போல் பைந்தமிழ் எப்போதாவது தட்டுப்படுகிறது. திருவள்ளுவரின் பெயரர்களாக வேண்டிய தமிழர்கள் ஆங்கில வழிக் கல்வியால் 'மெக்காலேவின்' பேரர்களாகி வருகின்றனர். வயிற்றுமொழிகளாக வந்த வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றால் பயிற்று மொழியாக வேண்டிய அன்னைத் தமிழ் அடையாளம் இழந்து வருகிறது. தாய்மொழியில் பிழைகள் மலிந்து வருவதைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய தலைவர்கள் கல்லாமை பற்றி எண்ணாமல், 'கல்லா' பற்றிய கனவிலேயே இருக்கிறார்கள்.

மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை
மாந்தோப்பில் நிழலா இல்லை
தணிப்பரிதாம் துன்பமிது தமிழ்நாட்டில்
தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை (பாவேந்தர் தமிழியக்கம்)

என்று பாடிய பாவேந்தரின் துயரம் விடிவு காணவில்லை. தமிழர் மரபணுவிலேயே பாதிப்பை ஏற்படுத்திவரும் அயன்மொழி ஆதிக்கத்திலிருந்து தமிழையும், தமிழர்களையும் மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு நம் தோள்களில் இறங்கியுள்ளது.

1

தமிழியக்கம் மறுவுயிர்ப்பு அடைய வேண்டும். தமிழர்கள் அதற்கென ஆவன அனைத்தும் செய்திடல் வேண்டும்.

தமிழியக்கம் மீண்டும் தொடர அமைப்பு ஒன்று **தமிழியக்கம்** என்ற பெயரில் தொட்டில் கட்ட வேண்டும். தமிழியக்க அமைப்பு உருவாக்க அணிதிரள்வோம்! என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற பட்டியல் சிந்தனைகளோடு அனைவரும் ஒருங்கே கூடுவோம்!

**தமிழியக்கம் அமைப்பு உருவாக்கக்**
**கலந்துரையாடல் கூட்டம்**

**நாள்: 14.2.2018** (புதன் கிழமை) காலை *10.00* மணி

தலைமை

கல்விக்கோ. முனைவர். கோ.விசுவநாதன்
வேந்தர், விஐடி பல்கலைக்கழகம்

முன்னிலை

திரு. த. ஸ்டாலின் குணசேகரன்
தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை

திரு. கே.பி.கே. செல்வராஜ்
தலைவர், திருப்பூர் முத்தமிழ் சங்கம்

திரு. செ. ர. சுப்ரமணியம்
துணைத் தலைவர், உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

இடம்: செங்குந்தர் மேல் நிலைப்பள்ளி, பிரப் சாலை, ஈரோடு-*1*

தொடர்புக்கு: திருமதி. பவள சங்கரி, எழுத்தாளர் - *9688008311*

**கருத்துரையாளர் தாங்கள் தாம்! வருக! வருக!**

அன்புடன்,
டாக்டர்.**கோ.விசுவநாதன்**, புலவர்.**வே.பதுமனார்**, பேராசிரியர் **அப்துல்காதர்**, **மு.சுகுமார்**
**வேலூர் தமிழ்ச்சங்க அறக்கட்டளை**

****************************************

2

???? - ??????????? ???????????????, ?????.
???? : ???????? 14, 2018
????? : ???? 10 ??? ?????